# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.107/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுமதி | க-பெ | மூவேந்திரன் |
| ஊர்: | : | ஊரவயல் | | |
| வயது: | : | 43/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2025

**எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் ஊரவயலில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். 2020 ம் வருடம் நான் எனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் காரைக்குடியில் பாரதிநகரில் வசித்து வந்தோம். எனது பெற்றோர் அரியக்குடியில் தென்றல் நகரில் வசித்து வந்தார்கள். இந்த நிலையில் எனது தகப்பனார் கிருஷ்ணன் என்பவர் TVS XL இருசக்கர வாகனத்தில் வீட்டில் இருந்து மாலை 6.00 மணியளவில் அருகில் உள்ள பிரதான சாலையில் சென்று கொண்டிருந்தபோது சம்பவ நேரத்தில் சம்பவ சாலையில் பெரிய இருசக்கர வாகனம் ஒன்று அவர் மீது அஜாக்கிரரையாகவும் கவனக்குறைவாகவும் வந்து மோதி விபத்தை ஏற்படுத்தியதாக அங்கிருந்தவர்களில் ஒருவர் எனது தாயாருக்கு தகவல் சொன்னார். அதன் அடிப்படையில் அவரை காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள்.

2) நான் தகவல் தெரிந்து சென்று பார்த்தபோது அங்கு எனது தகப்பனாருக்கு முதல் உதவி சிகிச்சை முடித்து விட்டு மேல் சிகிச்சைக்காக காவேரி மருத்துவமனையில் அனுமதித்தார்கள். நான் அங்கு சென்று பார்த்தேன். பின்னர் மீண்டும் மேல் சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மருத்துவமனைக்கு சிகிச்சையில் அனுமதித்தோம். 15 நாட்கள் சிகிச்சையில் இருந்த அவர் மருத்துவமனையில் இருந்து

விடுவிக்கப்பட்டு வீட்டிற்கு அவரை அழைத்து சென்றோம். பின்னர் இது தொடர்பாக இரு சக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்ககோரி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1**. மேற்படி விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் யார் என்ற விபரத்தை எனது தம்பி மூலமாக நான் தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜர் இல்லை என்பதால் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.12.11 10:16:58 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.